

தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் இயற்கை எய்தினார். இதை அடுத்து அன்னாரது உடல் அவரது சொந்த ஊரான இராணிப்பேட்டை மாவட்டம் – ஆர்க்காடு அருகேயுள்ள சக்கரமல்லூர், பழைய மாங்காடு கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் மாநில அயலக அணி அமைப்பாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஒன்றிய செயலாளர் எம்.வி. பாண்டுரங்கன், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஜெ. ரமேஷ், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஜெயக்குமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தார்கள்.

பேரா.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. – ஆஸ்டின் எம்.எல்.ஏ முன்னிலை!

சென்னை தெற்கு மாவட்டக் கழக மறுசீரமைப்புக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னைத் தெற்கு மாவட்டக் கழக மறுசீரமைப்புக் கூட்டம் நாளை (20-10-2026 செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதிகள் பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி - ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றியக் கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மற்றும் பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் கிளை கழக செயலாளர்கள் முதலானோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

மா.சுப்பிரமணியன்

செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

சிவகங்கையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி!

அமைச்சர் பிரபு பங்கேற்ற நிகழ்ச்சியில் சிவகங்கை எம்.எல்.ஏ. தொடர்ந்து புறக்கணிப்பு!

சிவகங்கை, அக்.19- சிவகங்கை மாவட்ட வருவாய் துறை சார்பில் நேற்று முன் தினம்17ம்தேதி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தலைமையில் நடை பெற்றது.


இந்த நிகழ்ச்சியில் கனிம வளத்துறை அமைச்சர் டி.கே .பிரபு மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் டி.கே.பிரபு கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்), இளங்கோவன் (மானாமதுரை) மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் சிவகங்கை தொகுதி எம்.எல்.ஏ. திருமதி குழந்தை ராணி நாச்சியார் விழாவை புறக்கணித்தார். தொடர்ந்து அவர் அமைச்சர் டி. கே பிரபு நிகழ்ச்சியில் பங்கேற்காமல் புறக்கணித்து வருகிறார் .இந்த முறையும் அவர் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்க வில்லை. இரண்டு மாதங்களுக்கு முன் சிவகங்கை யில் நடைபெற்ற சமூக நல விடுதி திறப்பு விழாவினை அவர் புறக்கணித்தார்.

நேற்றும் அமைச்சர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வில்லை. தொடர்ந்து அமைச்சர் டி.கே.பிரபு பங்கேற்கும் நிகழ்ச்சியினை புறக்கணித்து வருகிறார் .

அமைச்சருக்கும் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினருக்கு மிடையே மோதல் நீடித்து வருகிறது.இதனால் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினருக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்னையினால் த.வெ.க. தொண்டர்களுக்கி டையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலி 246வது ஆண்டு நினைவு நாள்!

முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அறிக்கை!



சிவகங்கை, அக்.19- நாட்டின் சுதந்திர த்திற் காக ஏற்பட்ட போரில் தன் உயிரைமாய்த்துக் கொண்ட வீரக்குயிலியின்246 வது ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது. இது குறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் விடுத் துள்ள அறிக்கையில் கூறி யுள்ளதாவது.

நாட்டின் சுதந்திர போராட்டத்தில் ஆங்கிலே யர்களின் படையினரை எதிர்த்து ராணி வேலுநாச்சி யார் தலைமையில் நடை பெற்ற விடுதலைப் போரில் படைத்தளபதியாக பணி யாற்றிய வீரத்தாய் குயிலி தன்னுடைய உயிரினை தீயில் மாய்த்துக்கொண்டு வீர மரணமடைந்தார் . அவ ரது வீரமரணம் ஆங்கிலே யர்களை அதிர்ச்சிக்குள் ளாக்கியது.

அத்தகைய வீரத்தாய் குயிலுக்கு கழக தலைவர் முதல்வர் தளபதி ஆட்சியில் சிவகங்கை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை யினை ஏற்று கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக வீரத் தாய் குயிலியின் முழுஉருவ வெண்கலச் சிலை அமைக் கப்பட்டது. கழகத்தலைவர் அப்போதைய முதல்வர் தளபதி மூ.க.ஸ்டா லின் அவர்கள் வீரத்தாய் குயிலி யின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். அத்த கைய வீரப்போராளி குயிலி யின் நினைவு நாள் ஒவ் வொரு ஆண்டும் அக்டோ பர் 20 ம்தேதி அனுசரிக்கப் படுகிறது.

வீரத்தாய் குயிலியின் தியாகத்தை போற்றும் வகையில் எதிர்கால சந்ததி யினர் தெரிந்து கொள்ளும் வகையில் நாளைகுயிலியின் 246வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காலை 11 மணியளவில் சிவ கங்கை காளையார் கோவில் சாலையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மாவட்ட கழக செயலாளர் எனது தலைமையில் (கே. ஆர். பெரியகருப்பன்) அவ ரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தப்படும். இதில் மாவட்ட கழக நிர் வாகிகள், ஒன்றிய,நகர, பேருர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே ஆர்.பெரி யகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

மாற்றுத்திறனாளிகள், முதியோர்களைப் பாதுகாக்க

அரசு உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்!

மழை பாதிப்புகள் ஏற்படும் முன்பே பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்வீர்!

கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தல்!

சென்னை, அக்.19- தமிழகத்தில் பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், மழை, வெள் ளம் மற்றும் பிற பேரிடர் களின்போது மாற்றுத்திற னாளிகள் மற்றும் முதி யோர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தமிழக அரசு உடனடியாகப் போர்க்கால அடிப்படை யில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று தி.மு.க. மாற்றுத்திறனாளி கள் அணியின் மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:-

பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில் மாற் றுத்திறனாளிகள், முதி யோர்கள் மற்றும் அவர்க ளது குடும்பங்கள் எதிர் கொள்ளும் பாதிப்புகள் வழக்கமான நிவாரண நட வடிக்கைகளால் மட்டும் முழுமையாகத் தீர்க்கப் பட முடியாது. குறிப்பாக, அதிக உதவி தேவைப்ப டும் மாற்றுத்திறனாளிகள், தனியாக வசிக்கும் முதி யோர்கள், ஆதரவற்ற குடும்பங்கள் மற்றும் அவ சரகாலங்களில் பிறரின் உதவியின்றி பாதுகாப் பான இடங்களுக்குச் செல்ல இயலாதவர்கள் ஆகியோரின் பாதுகாப்பில் தமிழக அரசு கூடுதல் கவ னம் செலுத்த வேண்டும்.

ஏற்கெனவே, பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005இன் கீழ் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் மேற் கொள்ள வேண்டிய கட மைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பாது காப்பை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அதி காரிகள், தமிழ்நாடு நகர்ப் புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள், மாற் றுத்திறனாளிகள் நல ஆணையர் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனா ளிகள் நல அலுவலர்கள் உள்ளிட்ட சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.

இந்தக் கோரிக்கை களை வெறும் கடிதங்களா கக் கருதாமல், அவற்றின் அடிப்படையில் உடனடி யாகச் செயல்பட வேண் டிய அவசியம் ஏற்பட் டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட குடும்பங்களை முன்கூட்டியே கண்ட றிந்து, அவர்களுக்குத் தேவையான அத்தியாவ சிய உணவுப் பொருட் கள், பாதுகாப்பான குடி நீர், மருந்துகள், மருத்துவ உதவிகள் மற்றும் பாது காப்பான தங்குமிடங்கள் ஆகியவற்றை உரிய நேரத் தில் வழங்குவதற்கான ஏற் பாடுகளை அரசு உறுதிப்ப டுத்த வேண்டும். வெள்ள அபாயம் உள்ள பகுதிக ளில் வசிப்பவர்களை முன் கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான திட்டங்க ளும் செயல்படுத்தப்பட வேண்டும்.

சிறப்பு ஏற்பாடுகள் தேவை!

பேரிடர் காலங்களில் சக்கர நாற்காலிகள், செவிப்புலன் கருவிகள், நடப்பதற்கான உதவிக் கருவிகள் மற்றும் பிற அத் தியாவசிய உதவி உபகர ணங்கள் சேதமடை யவோ, வெள்ளத்தில் அடித்துச்செல்லப்படவோ வாய்ப்புள்ளது. இதனால், பேரிடருக்குப் பிறகு மாற்



றுத்திறனாளிகள் தங்களது அன்றாட வாழ்க்கையைத் தொடர்வதிலும், மருத் துவ உதவிகளைப் பெறுவ திலும் கடுமையான சிர மங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

எனவே, சேதமடைந்த உதவி உபகரணங்களை உடனடியாகப் பழுது பார்த்துத் தருவதற்கும், பயன்படுத்த முடியாத உப கரணங்களுக்குப் பதிலாக மாற்று உபகரணங்களை வழங்குவதற்கும் அரசு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேபோன்று, வெள் ளம் மற்றும் பேரிடர்க ளால் ஆதார் அட்டை, மாற்றுத்திறனாளிகளுக் கான அடையாள அட்டை, மருத்துவ ஆவ ணங்கள், வங்கிச் சான்று கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை இழக்க நேரிடலாம். இத்தகைய சூழலில், பாதிக்கப்பட்ட வர்களை மீண்டும் மீண் டும் அலுவலகங்களுக்கு அலையவிடாமல், எளி மையான நடைமுறைக ளின் மூலம் மாற்று ஆவ ணங்களைப் பெற்றுத் தருவதற்கான சிறப்பு முகாம்களை அரசு நடத்த வேண்டும். ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு கூடுதல் நிர்வாகச் சுமையை ஏற்படுத்தாமல், மனிதநேயத்துடன் இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கும் இடமளிக்க வேண்டும்!

மாவட்ட மற்றும் மாநில அளவிலான பேரி டர் மேலாண்மைக் குழுக் களில் மாற்றுத்திறனாளிக ளின் பிரதிநிதிகள் இடம்பெறுவதை தமிழக அரசு உறுதிப்படுத்த வேண்டும். மாற்றுத்திற னாளிகளின் தேவைகள் குறித்து அவர்களிடம் நேர டியாகக் கேட்டறிந்து, பேரிடர் தடுப்பு, முன் னெச்சரிக்கை, பாதுகாப் பான வெளியேற்றம், நிவாரணம் மற்றும் மறு வாழ்வு தொடர்பான திட் டங்களை உருவாக்க வேண்டும்.

அணுகல்தன்மை இல் லாத நிவாரண முகாம்கள், தகவல் தொடர்பு வசதிக ளின் குறைபாடுகள், போக்குவரத்து சிக்கல்கள் மற்றும் மருத்துவ உதவிக ளைப் பெறுவதில் ஏற்ப டும் தடைகள் ஆகியவை பேரிடர் காலங்களில் மாற் றுத்திறனாளிகளின் உயி ருக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையக் கூடும். எனவே, பேரிடர் தொடர்பான அனைத்து திட்டங்களிலும் மாற்றுத் திறனாளிகளின் தேவை கள் உள்ளடக்கப்படுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக் குப் புரியும் வகையில் எச் சரிக்கைத் தகவல்களை வழங்குவதோடு, செவித்தி றன், பார்வைத்திறன் மற் றும் அறிவுசார் குறைபாடு கள் கொண்டவர்கள் உட்பட பல்வேறு மாற்றுத் திறனாளிகளும் அவற் றைப் புரிந்துகொண்டு உரிய நேரத்தில் பாதுகாப் பாகச் செயல்படுவதற் கான அணுகல்தன்மை கொண்ட தகவல் தொடர்பு முறைகளையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

மனிதநேய கடமை!

பேரிடர் காலங்களில் மாற்றுத்திறனாளிகள் மற் றும் முதியோர்களின் பாது காப்பு என்பது அரசின் கரு ணையைச் சார்ந்த விஷயமல்ல; அது அவர்க ளின் அடிப்படை உரிமை. அவர்களைப் பாதுகாப் பது அரசின் சட்டபூர்வ மான பொறுப்பும் சமூகத் தின் மனிதநேயக் கடமையுமாகும்.

மழை, வெள்ளம் ஏற் பட்டு உயிரிழப்புகளும் பாதிப்புகளும் நிகழ்ந்த பிறகு நிவாரண நடவடிக் கைகளை மேற்கொள்வ தைவிட, பாதிப்புகள் ஏற் படுவதற்கு முன்பே உரிய பாதுகாப்பு ஏற்பாடுக ளைச் செய்வதே பொறுப் பான நிர்வாகத்தின் அடை யாளம்.


எனவே, ஏற்கெனவே மு ன் வை க் க ப் ப ட் ட கோரிக்கைகளை தமிழக அரசு உடனடியாகப் பரிசீ லித்து, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிய அறிவு றுத்தல்களை வழங்கி, மாவட்ட அளவில் முன் னெச்சரிக்கை நடவடிக் கைகள் செயல்படுத்தப்ப டுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களின் பாதுகாப்பில் எவ்வித அலட்சியமும் ஏற்படாத வகையில், ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை உரு வாக்கி நடை முறைப்படுத்த வேண்டும் என்று பேராசிரியர் தீபக் நாதன் தமிழக அரசை வலி யுறுத்தியுள்ளார்.

முன்னெச்சரிக்கையே பாதுகாப்பு! உரிய நேரத் தில் உதவுவதே மனிதநே யம்!

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

முட்டுச்சந்தில்



கடமை என்ன என்பதை
அறியாத அப்ரன்டிஸ்
அமெச்சூர்கள்
ஒரு பக்கமும்

முதலமைச்சராக
நடக்காமல்
முதலமைச்சராக நடிக்க
மட்டுமே கால்ஷீட்
கொடுத்து அலையும்
சினிமாத்தனத்தில்
“முதன்மை அமைச்சர்”
மறுபக்கமும்..

இது தான் தங்களுக்கான
பொற்காலம் என ஆடித்
தீர்க்கும் அதிகாரிகள்
இன்னொரு பக்கமும் என

மொத்தத் தமிழகமும்
முட்டுச்சந்தில்
விக்கித்து நிற்கிறது...

சட்டம் ஒழுங்கு சர்வநாசம்...

சகல அத்தியாவசிய
பொருட்களின்
விலைகளும்
கடும் உயர்வு...

இயற்கை சீற்றங்களை
நோக்கி நகரும் நெருக்கடிக்
காலத்தை எதிர் கொள்ள
முறையான திட்டமின்மை..

மின்தடை
ஒரு பக்கம் தாறுமாறான
மின்கட்டணம் மறுபக்கம்...

தி.மு.க. ஆட்சிக்காலத்து
நிறைவுற்ற திட்டங்களுக்கு
ரிப்பன் வெட்டுவதை தவிர
வேறு எதுவுமே நடக்காத
முடக்க நிலையில் அரசு
நிர்வாகம்...

குறுவை சம்பா சாகுபடி
முற்றிலுமாக சீர்குலைவு...

கொடுத்த
வாக்குறுதிகளை
கோமாவில் கிடத்தி
வைத்து விட்டு

“கையை
அசைத்தார்”

“காலை ஆட்டினார்”
“பல்லால் சிரித்தார்”

“பட்டு வேட்டியில்
ஜொலித்தார்”
என்றெல்லாம்

அருவருப்பு பெய்டு
நியூஸ் பிரேக்கிங்களின்
கிறுக்குத்தனங்கள்...

இப்படி

துயரங்களின் தோரணமாக
தொடரும்
இந்த ஆட்சிக்காக

வாக்களித்தவர்கள்
மட்டுமல்ல இந்த ஆட்சியை
உருவாக்கிய EVM
எந்திரங்களுக்கு உயிர்
இருந்தால் அவைகளுமே
ஆளத் தெரியாத
மக்குகளிடம் தமிழகத்தை
ஒப்படைத்து விட்டோமோ
என கண்ணீர் விட்டு கதறித்
தான் அழும் ...

இது தான்
நிஜம்
இது தான் நிதர்சனம்...

இந்த பொம்மலாட்ட
ஆட்சியின் கயிறு பிடித்து
ஆட்டிக் கொண்டிருக்கும்
மத்தியில் ஆளும்
பாவிகளுக்கும்...

இந்த மொத்த
மடத்தனங்களுக்கு
காரணமான அந்த
“காவிகளுக்கும்” இது
தெரியும் தானே...

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்

கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத் தலைவர்